தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் (**B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு (**OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**C021** இலக்கணம் – 1 (எழுத்து)

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. தமிழில் உள்ள சுட்டு எழுத்துகள் எத்தனை ? அவை யாவை?
2. வன்தொடர்க் குற்றியலுகரத்திற்கு ஒரு சான்று தருக.
3. உயிரளபெடை எத்தனை மாத்திரை பெறும்?
4. இதழ் குவிதல் முயற்சியால் பிறக்கும் உயிரெழுத்துகள் யாவை?
5. மேற்பல் கீழ் இதழோடு இயைந்து பொருந்துவதால் பிறக்கும் மெய்யெழுத்து எது?
6. பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. எதிர்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?
8. பகுதி இரட்டித்துக் காலம் காட்டுதலுக்கு ஒரு சான்று தருக.
9. வினைத்தொகைக்கு ஒரு சான்று தருக.
10. பொன் + தாமரை – புணர்ச்சியில் எவ்வாறு சேர்ந்து வரும்?
11. நன்னூலார் குறிப்பிடும் உடம்படுமெய்கள் யாவை?
12. பனம்பழம் – பிரித்து எழுதுக.
13. முள் + செடி – புணர்ச்சியில் எவ்வாறு வரும்?
14. புளியம்பழம் – இதில் வந்துள்ள சாரியை எது?
15. நன்னூலாற் காலத்தில் ‘எல்லா நம்மையும்’ என்று வழங்கிய சொல் இக்காலத்தில் எவ்வாறு வழங்குகிறது.

## பிரிவு - 2

எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. **(5x3=15)**

1. போலி என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
2. செய்யுளிசை அளபெடை என்றால் என்ன? சான்று காட்டி விளக்குக.
3. பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவற்றைச் சான்று தந்து விளக்குக.
4. பண்புப் பெயர்ப் பகுதிகள் பிற சொற்களோடு புணரும்போது அவை அடையும் எழுவகை மாற்றங்கள் யாவை?
5. 'பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்' – இந்நூற்பாவின் கருத்தைச் சான்றுடன் விளக்குக.
6. தொகாநிலைப் புணர்ச்சியின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.
7. 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – இந்நூற்பாவின் கருத்தை விளக்குக.
8. எண்ணுப் பெயர்கள், எண்ணுப் பெயரடைகள் முன்வரும் வல்லினம் மிகாமையைச் சான்று காட்டி விளக்குக.

## பிரிவு - 3

<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. **(3x15=45)**

1. (அ) மெய்ம்மயக்கத்தின் வகைகளைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யெழுத்துகளின் பிறப்புப் பற்றிய நன்னூலார் கருத்துகளை எழுதுக.

2. (அ) பகுபத உறுப்புகள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) எகர வினா, முச்சுட்டின் முன்னர் நாற்கணமும் புணரும் முறையைச் சான்றுகள் காட்டி விளக்குக.

3. (அ) மகர ஈற்றுப் புணர்ச்சி விதிகளாக நன்னூலார் கூறுவனவற்றைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இக்காலத் தமிழில் வல்லினம் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

✱✱✱